**தேதி :** 10.10.2025 **SC.No. :** 495/2023 PW :1 மாரிச்செல்வம்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

அ.சா.2 வசந்தா என்பவர் என்னுடைய தாயார் ஆவார். அ.சா.3 வடிவேல் எனது மாமா ஆவார். அ.சா.4 கவின் எனது சித்தப்பா பையன் ஆவார். அ.சா.14 பால்ராஜ் என்பவர் எனது தாய்மாமா. சம்பவத்தன்று நான் கணேஷ் பீடி கம்பெனியில் வேலை பார்க்க சென்றேன் என்றால் சரிதான். இரவு தான் சம்பவம் நடந்தது. அ.சா.2 வசந்தா எனது அம்மா திருமலையாண்டவர் கோவில் தெருவில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் காமராஜர் நகரில் தனியாக குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். எனது தம்பி கவின் தகவல் சொல்லித்தான் சம்பவயிடத்திற்கு நான் வந்தேன் என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு அரை மணிநேரம் கழித்து வந்தேனா? என்றால் இல்லை.

நான் சம்பவயிடத்திற்கு வந்தபோது, எதிரி அங்கு இல்லை என்றால் சரியல்ல. சம்பவயிடமானது ஒரு முடுக்கு என்றால் சரிதான். அது இரண்டு புறமும் செல்லலாம். எதிரி எந்த திசையை நோக்கி சென்றார் என்றால் மேற்கு நோக்கி சென்றார். நான் இந்த விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரி மாரீஸ்வரிக்கு சம்பவத்திற்கு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் 5 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. எனது அப்பாவின் இறப்பு சான்று, வாரிசு சான்றுகளை நான் போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை.

எங்களுடைய சொத்துகளின் வருவாய்த்துறை ஆவணங்களை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் பத்திரம் கொடுத்துள்ளேன். எனக்கு வாரிசின் அடிப்படையில் சொத்து கிடைத்ததா? என்றால் கிடைத்தது. நான் அதற்கான ஆவணங்களை போலீசார் விசாரணையில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் வசந்தன் என்று ஒரு நபரின் வீடு இல்லை என்றால் சரிதான். எந்த தேதியில் ஒப்பந்தம் போட்டேன் என்றால் எனக்கு தேதி ஞாபகமில்லை. எந்த தேதியில் எதிரியிடமிருந்து பணம் வாங்கினேன் என்று எனக்கு ஞாபகமில்லை. எத்தனை தேதிக்குள் பத்திரம் முடிக்க வேண்டும் என்று எழுதப்பட்டிருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய மாமனார் பால்ராஜ் மீது சுரண்டை காவல்நிலையத்தில் போலீஸ் ஜீப்பை உடைத்ததாக ஒரு குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எதிரி சாட்சியம் அளித்தார் என்றாலும், அந்த முன்பகையினால் என்னுடைய மாமா கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் கதவுநிலையில் இடித்து கீழே அரிவாள்மனையில் விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது மாமா பால்ராஜின் தூண்டுதலின் பேரில், எதிரி மீது என்னுடைய தாயார் பொய் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஒப்பந்தம் என்னால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 17:55:43 +0530